அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட்டால் எந்த அளவுக்கு நினைவுச் சின்னம் வைக்கலாம் என்பதைப்பற்றி ஆராயலாம். அந்த அரண்மனையை நாமே எடுத்து நடத்துகிற அளவுக்கு தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு அமைந்ததாக அது இல்லை.

மருதுபாண்டியர்கள் இருந்தார்கள் என்ற புகழ் உண்டு. அது அழகுவாய்ந்த இடம் என்று சொல்வதற்கும் இல்லை. தமிழகத்தில் எல்லா ஜமீன்தார்களின் வீடுகளைக்கூட அரண்மனை என்று தான் சொல்கிறார்கள். அங்கே இருப்பவர்கள் ராஜாக்கள் என்று தான் அழைக்கப்படுகிறார்கள். அப்படிப் பார்த்தால் தமிழ் நாட்டில் ஊருக்கு ஊர் ஒரு அரண்மனை இருக்கிறது. அதெல்லாம் கூட ஜமீன்தார்கள் வாழ்ந்த இடம் என்றுதான் அழைக்கிறார்கள்.

அது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாக இருந்தால்தான் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் எடுத்து பராமரித்து வைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது இன்னும் தனியார் சொத்தாகத்தான் இருந்து வருகிறது.

Tourism Development Corporation

* Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the amount of profit earned by the Tourism Development Corporation in the State during 1972; and

(b) the expenditure incurred by the Corporation during 1972?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆதாயம் ஏதும் கிட்டவில்லை.

(இ) 16,32,579 ரூபாய்.

திரு. என். கே. பழனிசாமி : 1973-74-ல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா? லாபம் ஏற்பட்டிருக்கிறதா? அதிகப்படியான செலவு ஏற்பட்டதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த வாரியம் 1971-ம் ஆண்டில் துவக்கப்பட்டு, அப்பொழுது 6 சுற்றுலா மாளிகைகளை எடுத்துக்கொண்டது. அவைகளை எடுத்துக்கொண்ட நிலையிலே அவைகளை மேலும் கவர்ச்சிகரமாக ஆக்குவதற்கு, புதுப்

1974 மார்ச் 26]

பிப்பதற்கு எடுத்த எடுப்பிலேயே பெரிய அளவுக்குத் தொகை செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் காரணமாக அந்த ஆண்டில் 1972-73-ல் the loss was mainly due to provision of depreciation value ரூ. 2,26,540 என்பது expenditure on headquarters establishment என்ற அளவுக்கு வருகிறது. 1973-74-ல் இனிமேல் அப்படிப்பட்ட மூலதனச் செலவு அதிகமாக ஆக வழியில்லை. இந்த ஆண்டு செலவு போக வருமானம் ஓரளவுக்கு கூடுதலாக வரக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதன் விவரம் வந்த பிறகு தெரியக் கூடும்.

திரு. நா. வீராசாமி : சுற்றுலா இன்னும் சிறப்பாகச் செயல் படக்கூடிய வகையில் நாம் இப்பொழுது நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறோம். கப்பல் ஓட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைப் பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க, அவர்கள் இங்கே வந்து போக அதன் மூலம் வருமானம் பெருக வழிவகை செய்யப்படு கிறது. ஆற்காடு நவாப் வாழ்ந்த இடத்தில், அப்படிப்பட்ட பல வீரர்கள் வாழ்ந்த இடத்தில் நினைவுச் சின்னம் எழுப்புவதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து பார்த்துச் சென்றால் அதன் மூலம் நிறைய வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அம்மாதிரி ஒரு நினைவுச் சின்னத்தை ஆற்காடு நவாப் புக்கு எழுப்ப அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு நினைவுச் சின்னங்கள் அமைப்பதுபற்றி சுற்றுலாத் துறையினர் ஆராய்ந்து எந்தெந்தப் பணிகளை எந்தெந்த வகையில் எந்தெந்த இடத்தில் செய்து அந்த இடங்களைச் செம்மைப்படுத்திச் சீர்படுத் தினால் அதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் ஈர்க்கப்படுவார்கள் என்று பார்த்து இத்தகைய பணிகளை மேற்கொள்கிறார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது ஆற்காடு எந்தக் கட்டத்தில் வருகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். முன்உரிமை வழங்கப் படவேண்டிய இடங்கள் பல இருப்பதன் காரணமாக அதை யெல்லாம் பார்த்து முடித்த பிறகு ஆற்காட்டுக்கு வரவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்வதற்கு சொகுசுப் பேருந்துகளைச் சுற்றுலாத் துறையினர் விடுகின்றனர். அதை மேலும் வசதியுள்ள சொகுசுப் பேருந்து களாக மாற்றி, அந்த சொகுசுப் பேருந்துகளில் மற்ற

மாநிலங்களில் இருப்பதைப்போல விரிவுரையாளர்களை நியமித்தால் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் சுற்றுப்புறத்திலுள்ள விஷயங்களை அதிகமாக அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சொகுசுப் பேருந்துகளில் விரிவுரையாளர்களை அமர்த்திட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதற்கான ஒரு திட்டம் பற்றி சுற்றுலா வாரியம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: இந்த சுற்றுலாக் கழகம் உள்நாட்டுப் பிரயாணிகளை ஈர்ப்பதைக் காட்டிலும் வெளி நாட்டுப் பிரயாணிகளை ஈர்ப்பதில் மிகவும் கவனம் கொள்ள வேண்டும். ஏனெனில் வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களிடமிருந்துதான் பணம் அதிகமாகப் பெற முடியும். ஆகவே, வெளிநாட்டுப் பிரயாணிகளைக் கவர்கின்ற வகையில் சர்க்கார் ஏதாவது சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கத்தக்க அளவுக்கு குறிப்பிட்ட இடங்களை நாம் அந்த வகையில் சீர்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே சென்னையை அடுத்துள்ள மகாபலிபுரம், சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையிலும் உள்ள பகுதிகளில் வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற அளவுக்கு சுற்றுலாப் பயணிகள் விடுதிகளைக் கட்டுவதற்குத் தனியார்களும் முன்வந்திருக்கிறார்கள். மத்திய அரசும் ஏற்கனவே ஒரு விடுதியை நடத்தி வருகிறது. மாநில அரசின் சுற்றுலா வாரியத்தின் சார்பாகவும் அத்தகைய முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அதற்கு அடுத்தபடியாக காஞ்சீபுரத்திற்குச் சென்று பார்த்து வரும் வகையிலே வெளி நாட்டிலிருந்து பயணிகள் வருகிறார்கள். அடுத்து, மதுரை, ராமேசுவரம், கன்னியாகுமரி முனை, கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்கள் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க இடங்கள் என்ற நிலைமையில் இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கத்தக்க அளவுக்கு எந்தெந்த இடங்களில் சூழ்நிலை இருக்கிறதோ, அந்த இடங்களில் அதிக கவனம் செலுத்தி, 2, 3 நாட்களுக்குப் பயணிகள் தங்கிச் செல்லும் வகையில் வசதிகள் வாய்ப்புகள் செய்து தருவதற்கான முயற்சிகளைச் சுற்றுலாத் துறையினரும், சுற்றுலா வாரியமும் மேற்கொண்டிருக்கின்றன.

1974 மார்ச் 26]

திரு. சி. ஆறுமுகம் : சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும்போது சென்னையிலிருந்து காஞ்சிபுரம், திருக்கழுக் குன்றம், மகாபலிபுரம் ஆகிய இடங்களைக் காட்டுகின்றனர். புகழ் வாய்ந்த கோதண்டராமசாமி கோவிலுக்கும், மதுராந்தகத்திற்கும் அழைத்துச் செல்வதில்லை. ஆகவே, சென்னையிலிருந்து போகிறவர்களை வழியில் மதுராந்தகம், கோதண்டராமசாமி கோவிலுக்கு அழைத்துச்செல்லவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வெளி நாடுகளிலிருந்து வருகிற பிரயாணிகள் கலைச்சிறப்பு, வரலாற்றுச் சிறப்பைக் காணவருகிறார்களே தவிர, பக்தியினுடைய அடிப்படையில் ஸ்தல யாத்திரை செய்ய வருவதில்லை. ஸ்தல யாத்திரைக்கு வரும்பொழுது கோதண்டராமசாமி கோவில் ஸ்தல புராணத்தை விரித்துரைக்கலாம். இப்படி வருகிறவர்கள் 2, 3 மணி நேரம்தான் அங்கே செலவழிக்கிறார்கள். ஆகவே, வரலாற்றுச் சிறப்பு, கலைச் சிறப்பு மிக்க இடங்கள் என்ற வகையில் மதுராந்தகம் கோதண்ட ராமசாமி கோவில் அடங்கவில்லை.

* 594 Q.— Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government and State Tourism Development Corporation to promote Thiruvanmiyur as a Tourist Centre; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என் டென்னிஸ் : மெரினா கடற்கரை இப்பொழுது நெருக்கடியான இடமாக மாறிக்கொண்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகள் அமைதியான இடங்களை விரும்புகிறார்கள். ஆகையால் இதை அபிவிருத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த வகையிலே திருவான்மியூர் அந்தக் கட்டத்தில் வரவில்லை. சென்னை மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடலோரம், சோழமண்டலம், கோவளம், கன்னியாகுமரி, மகாபலிபுரம் கடற்கரை ஆகிய பகுதிகளை விரிவு படுத்தி, அவைகளை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத்தக்க அளவுக்கு ஆக்குவதற்கான முயற்சிகளை சுற்றுலா வாரியம் மேற்கொண்டு